திராவிடன்

ஆசிரியர்: என்.வி.நடராசன்

இதழ் 15 10-3-62 சனிக்கிழமை விலை 16 காசு. மலர் 29

"கவிஞன் வாக்கு கடவுள் வாக்கு!"

மூப்பத்து நான்கு லட்ச மக்கள் தி. மு. கழகத்திற்கு ஆதரவாக வாக்களித்த பிறகு, ஐம்பது வேட்பாளர்களை சட்டமன்றத்திற்கும், எழுவரை பாராளுமன்றத்திற்கும் நாடு தேர்ந்தெடுத்துவிட்ட பிறகு கனம் காமராசர் திருவாய்மலர்ந்திருக்கிறார். பிரிவினை கட்சி என்று சப்புக்கொட்டுகிறார்—தி. மு கழக லட்சியத்தை இப்போதுதான் புரிந்துகொண்ட புதியவர் போல!

நேருபிரான் தடைச் சட்டம் கொண்டுவர முயன்றபோது கழகம் வெறும் பேச்சுக்கட்சி. அதை நாங்களே சமாளித்து விடுவோம் என்று 'சண்டப்பிரசண்டம்' செய்தவர் காமராசர் அவரது ஆசையை அடித்து வீழ்த்துவதுபோல, சட்டமன்றத்திலும், பாராளுமன்றத்திலும் மும்மடங்கு வெற்றி முழக்கம் செய்திருக்கிறது கழகம்!

வடக்கத்திய எசமானர்கள் காமராசரை வாழ்த்தவா செய்வார்கள்? இருந்த இடங்களையும் இழந்தவர் காமராசர்—அவர் கைராசியோ, முகராசியோ, சில கழகத்தவர் தோற்றதற்கு காரணமல்ல. பணராசியை வைத்துக்கொண்டு இலக்குத் தாக்குதல் நடத்தி இருந்த சில தேசிய திருத்தலங்களை கோட்டைவிட்ட குணாளர் உருப்படியான எதிர்க்கட்சியை கண்ட பிறகும் உளறிக்கொட்டுவது அவருக்கே உரிய 'பற்ருக்குறையை'த் தான் காட்டுகிறது!

மதிமந்திரி சுப்ரமண்யம் தி. மு. கழகத்திற்கு ஐந்து இடங்கள் தான் கிடைக்கும் என்று எந்த நேரத்தில் வாயைத் திறந்தாரோ, தெரியவில்லை. அது ஐம்பதாக உருவெடுத்து காமராசர் முன் நிற்கிறது! அவருக்கென்ன? டில்லி போகிறார்! போகிற போக்கில் காமராசருக்கு கொஞ்சம் காரம் பறிமாறிவிட்டுப் போகிறார்!

பஞ்சம், பிணி, பசி இவைகளை காட்டி, ஏழைகளை ஏய்த்து தி. மு. கழகம் ஐம்பது இடங்களைப் பிடித்துக்கொண்டதாம்! ஐம்பது இடங்களை குறிப்பிட்ட ஒரு மாற்றுக்கட்சி கைப்பற்றுமளவுக்கு தமிழ் நாட்டில் பசியும், வறுமையும் இருப்பதாக ஒப்புக்கொண்டாரே! வாழ்க!

இந்த நற்சாட்சி பத்திரம் காமராசர் ஆட்சிக்குத்தானே!

தனது மருமகனை தேர்ந்தெடுக்காத திருவனந்தபுரம் மக்களை பட்டம் தாணு 'முட்டாள்கள் என்பதைப்போல, தி. மு. கழகத்தவரைத் தேர்ந்தெடுத்த தொகுதி மக்களை சுப்ரமண்யம் 'தரித்திரர்கள்' என்கிறார்.

எரிச்சலும், ஏமாற்றமும்தான் தெரிகின்றன, இரண்டிலும்!

தி. மு. கழக சட்டமன்ற உறுப்பினர்கள் தோற்றதற்கு காரணம் பிரிவினை கொள்கைதான் என்றால், கிடைத்த வெற்றிக்கு என்ன காரணம்? 'திராவிட நாடு திராவிடருக்கே! என்ற லட்சியத்தை தி. மு. கழகம் தேர்தல் அறிக்கையில் தெள்ளத் தெளிவாக இழைத்திருக்கிறதே! 'நாட்டுப் பிரிவினையை

சதுரங்கம்

வெறுத்து தோற்றமளித்த தமிழ்த் தேசீயக் கட்சியின் நிலை எதிர்கால அரசியல் சரித்திரத்தில் பாடமாகப் போகிறதே! இதனை ஏன் புரிந்துகொள்ளவில்லை மதி அமைச்சர்?

லட்சம் லட்சமாக வாங்கிய தேர்தல் நிதியை காங்கிரசார் என்ன செய்தார்கள்? காஞ்சீபுரத்

சேரன்தம்பி

திலும் மற்ற கழகத்தவர் தொகுதியிலும் திரை மறைவில்தானே அந்த செல்வம் செலவிடப்பட்டது! மக்களுக்கு இது தெரியாமலா போய்விடும்?

பஞ்சமும், பசியும் இருந்ததால் தான் பணத்திற்கு சில தொகுதி மக்களிடம் மதிப்பு இருந்தது என்று சுப்ரமண்யம் கூற்றை இப்படியும் எடுத்துக்கொள்ளலாமே!

இந்த புத்தியும் கண்டுபிடிப்பும் அங்கே பனியாக்கள் மத்தியிலே உத்யோகம்' பார்க்கத்தான் லாயக்கு! டில்லிக்குப் போவது தனிப்பட்ட முறையில் அவருக்கும்-பரவலாக நாட்டுக்கும் நல்லது!

போய்வரட்டும்!

ஃ

"கவிஞன் வாக்கு கடவுள் வாக்கு!" தேர்தலுக்கு முன்னால் இப்படி ஒரு குரல் கேட்டது! அதோடு அவர் தோற்பார்! இவர் வெற்றி பெறுவார்! என்ற 'பூவா. தலையா' விளையாட்டு வேறு!

ஏதோ தமிழ் நாட்டில் கவிஞர்களுக்கு ஒரு மதிப்பு இருந்து கொண்டு வருகிறது! அதையும் 'தென்சென்னை'யாக்கி விட ஒருவர் முனைந்து நின்றால் என்ன செய்வது? எழுதி, எழுதி, பேசிப்பேசி திட்டித்தீர்த்து 'உள்ளதும் போயிற்றே!' என்று ஒப்பாரி ஒலிக்க ஒரு கட்சியை சந்தியிலே விட வேறு யாரால் முடியும்? போதாக்குறைக்கு 'ஒற்றைத் தலைவர்' ம. பொ. சி;யும் சேர்ந்து கொண்டார்! பின் எங்கே உருப்படப் போகிறது? கவிஞர்தான் முன்பே சொல்லியிருக்கிறாரே, 'சிவகங்கை சீமை'யை ஆரம்பித்து வைத்த கை உருப்படாத கை என்று! தெரிந்த பிறகும் இப்படி செய்யலாமா? சிற்றப்பா சுவாதீனம் கூட கடைசி நேரத்தில் செத்துத் தொலைந்தது?

வெற்றிதான் இல்லை இரண்டாவதாகக்கூட இருக்கக்கூடாதா? இப்படியுமா போவது?

"அதோ! அதோ!" ஒரு குரல் கேட்டது!

"எங்கே?" என்றார்கள் பலர்.

"சிங்கம் குகைக்குள்ளே போயிருக்கிறது! அதனை அங்கேயே சந்திக்கப்போகிறேன்!"

கை தட்டல், ஆரவாரம், ஊதல் சத்தம், எல்லாமே அதிர்ந்தது!

தலைவர் பேசினார்:

"வேண்டாம் உள்ளே போகாதே! வெளியே சிங்கம்தான் வரும்! நீ வரமாட்டாய்!"

"அதைத்தான் பார்த்து விடுவோம்!

மீண்டும் கை தட்டல், சத்தம்! கவிதையிலே வாழ்த்து! விஸ்வநாதன்-ராமமூர்த்தியின் இசை அமைத்துவிட இனிமையான ஒலிகள் பின்னணி செய்கின்றன!

ம. பொ. சி. யின் ஆதரவு, அஷ்டநாக்கு படைத்த கம்யூனிஸ்ட் கட்சியின் தார்மீக ஒத்துழைப்பு, காங்கிரசின் கண்ஜாடை எல்லாம் இருந்தும் என்ன ஆயிற்று?

குகைப் போராட்டம் முடிந்தது! போனவர் திரும்பவில்லை; சிங்கமும் வரவில்லை.

சிங்கக்குட்டி தான் வெளியே வந்தது!

ஃ

கேரளத்தில் தற்போது நடந்த பாராளுமன்றத் தேர்தலில் பொதுவுடமையினர் புதியதோர் 'கோஷத்தை' முழக்கினார்கள்! சாதாரணமாகவே அவர்கள் கோஷமிடுவதில் பேர் போனவர்கள்! அதுவும் மாவட்டத்திற்கு மாவட்டம் முறைபாடான கோஷத்தையும், பிரதேசத்திற்கு பிரதேசம் லட்சிய மாற்றங்களையும் லெனினிஸ, ஸ்டாலினிஸ பாணியிலேயே வார்த்து வைத்துக்கொண்டவர்கள்!

மத்திய பீடத்தின் அநீதியை அழிக்க—

கேரளத்தின் உரிமையைப் பெற-
கேரளத்தின் குரல் டில்லியிலே ஒலிக்க—

இப்படி விதவிதமான முழக்கங்கள் சுவர்களிலே ஒளிவிட்டன; மேடையிலே பேசப்பட்டன. பத்திரிகைகளில் தலைப்பு எழுத்துக்களாயின!

அநீதியையும்' உரிமையையும் புதிதாக கண்டுபிடித்து விட்டாற்போல முழுக்க முழுக்க வித்தியாசமான பிரசாரத்தை கையாண்டார்கள்! வெள்ளைக்காரன் வெளியேறிய நாளிலிருந்து இந்த அநீதி கேரளத்துக்கு மட்டுமல்ல—தென் மாநிலங்களுக்கே இழைக்கப்பட்டுத்தான் வருகிறது. பொதுவுடமையினர் இதனைப் புதுமையாகச் சொல்வதின் காரணம், மக்களின் மனச்சாட்சியை தாங்களும் எதிரொலிக்க வேண்டும் என்றதேவையினால்தான்!

இருபத்தி எட்டு மாத காலம் இவர்கள் ஆட்சி செய்தபோது பட்டம்தாணு எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்துகொண்டு 'டில்லியிடமிருந்து உரிமையைப் பெற வேண்டும்' என்று முழங்கினார்!

[8-ம் பக்கம் பார்க்க]

எதிர்க்கட்சித் தலைவர்கள் தோற்றதால் காங்கிரசின் வீழ்ச்சி மறைந்துவிடாது!

வெளிநாட்டாரின் எண்ணம் வெகு சீக்கிரம் மாறிவிடும்!

ஜனநாயகம் அழிக்கப்படுவதை கழகம் இனி அனுமதிக்காது!

கடற்கரையில் அறிஞர் அண்ணா ஆற்றிய சொற்போர்!

திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிக்களிப்பைவிட வேதனையில் தான் அதிகமாக வளர்ந்திருக்கிறது. நமக்குப் பெயர் 'கண்ணீர்த் துளி'தானே தவிர, 'பன்னீர்த்துளி' அல்ல! எனவேதான் நான், கண்ணீரைத் துடைத்துக் கொண்டு காரியமாற்றுங்கள் என்று தெரிவித்தேன்.

ரோம் நாட்டில் மாவீரன் ஒருவன், போர்க்களத்தில் மாண்டான். அவன் மாண்டது கேட்டு உற்றார், உறவினர் அனைவரும் அழுதனர்; ஊரே அழுதது; ஆனால் அவனைப் பெற்ற தாய் மட்டும் அழவில்லை. 'நீ ஏன் அழவில்லை?. என்று அந்தத் தாயிடம் கேட்டார்கள். அதற்கு அந்தத் தாய் 'என் மகன் கடமையாற்றுகையில் மாண்டான்; அதற்காக நான் அழுதால், 'இந்தக் கோழைக்கா பிறந்தான் அந்த வீரன்?' என்று ஊரார் எண்ணுவர்; அதனால்தான் அழவில்லை' என்று பதில் சொன்னாள். அந்த வீரத் தாயின் மனப்பான்மை உங்களுக்கெல்லாம் இந்த நேரத்தில் ஏற்பட வேண்டும். நாங்கள் தோற்றதற்காகக் கவலைப்படக்கூடாது,

''குழந்தை பிறந்தவுடன் தாய் செத்த செய்திகளை நாம் கேள்விப்படுவதில்லையா? அதனால் பிறந்த குழந்தையையுமா சாகடித்துவிடுகிறோம்? 'தாய் செத்துவிட்டாலும் பரவாயில்லை; குழந்தையைப் பிழைக்கவைப்போம்'என்று முயற்சி செய்யவில்லையா? அதைப்போல, நீங்கள் இப்போது செத்த தாயைப் பற்றிக் கவலைப்படுவதுபோல் தோற்றவர்களைப்பற்றிக் கவலைப்படவேண்டாம்! பிறந்த குழந்தையைப் பிழைக்க வையுங்கள்—வெற்றிபெற்றவர்களை எண்ணிப் பெருமைப் படுங்கள்! அவர்கள் நன்கு பணியாற்ற உதவுங்கள்—என்று கேட்டுக்கொள்கிறேன்.''

இப்போது சில பத்திரிகைகள் எங்களுக்குப் புத்திசொல்ல ஆரம்பித்திருக்கின்றன; எங்களுக்குப் புத்திசொல்லக்கூடிய அளவுக்கு நாங்கள் அவர்களுடைய கண்ணுக்குத் தெரிகின்றோம், முன்பெல்லாம் நாங்கள் அவர்கள் கண்ணுக்கே தெரியாமலிருந்தோம்.

இப்போது புத்திசொல்லவேண்டியது யாருக்கு? ஆளுங்கட்சியை, வடக்கே சில இடங்களில் சுதந்திராக் கட்சியும், கம்யூனிஸ்டுக் கட்சியும், இங்கே தி. மு. கழகமும் அறைகூவி அழைத்திருக்கின்றன—இத்தேர்தலில்! 'ஆளத்தெரியாததால்தானே இந்தத் தொல்லையெல்லாம் வந்திருக்கின்றன?' என்று காங்கிரசுக்குப் புத்திசொல்வதா— எங்களுக்குச் சொல்வதா? நானும் ஒரு பத்திரிகைக்காரன் என்ற முறையில்தான் கேட்கிறேன். புத்தி சொல்வது தவறு என்று சொல்லவில்லை—யாருக்குச் சொல்லவேண்டும்?

ஆளுங்கட்சி தனது அகந்தையின் காரணமாக இறங்குநிலை ஏற்பட்டிருக்கிறது, இந்நிலையில். யாருக்குப் புத்திசொல்வது?

'இந்து' பத்திரிகை எழுதியிருப்பதில் வாசகப்பொருத்தமாவது இருக்கிறதா என்று பாருங்கள், சென்ற சட்டமன்றத்தில் நாம் 15 பேர், 'இருந்ததே தெரியாதபடி' இருந்தோமாம்! இப்போது 50 பேர் வந்துள்ளதால் உலகுக்கு நாம் இருப்பது தெரியுமாம்! — 'இந்து' இதழ்தான் இப்படி எழுதுகிறது.

சட்டமன்றத்தில் பணியாற்றுவது என்பது, 'இந்து' பத்திரிகை எண்ணுகிறபடிதான் இருக்க வேண்டும் என்பதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்பத்திரிகை மேலும் என்ன சொல்கிறது தெரியுமா? — 'உபயோகமற்ற முறையில் 15 பேர் இருந்தார்கள்: இப்போது 50 பேர் புதிதாக வந்திருப்பதால் நல்ல பலன் ஏற்படும்' என்று எழுதியிருந்தால் அதன் வாதம் பொருத்தமாக இருக்கும்; ஆனால் அப்படி எழுதவில்லை; சட்டமன்றத்திற்குள்ளே இருந்த 'ஊருக்குத் தெரியாதவர்கள்' போய் விட்டார்கள் என்பதற்காக அது வருந்துகிறது; 'ஐயோ, அவர்கள் இல்லையே— தோற்றுவிட்டார்களே' என்று வருந்தி எழுதுகிறது'

'இந்து' பத்திரிகை, உலகில் பேரறிவாளர்களால் போற்றப்படுகின்ற பத்திரிகை என்று பெயரெடுத்திருக்கிறது. அதற்கு நம் கழகத்தின்பால் நல்லெண்ணம் கூட வேண்டாம்— அறிவுக்குப் பொருத்தமாகவாவது இருக்க வேண்டாமா? இதற்கு இலண்டனில் கிளை எதற்கு?

'சேலை கட்டி வந்தான் சென்னியப்பன்' என்பது போலல்லவா இருக்கிறது அதன் வாதம்? 'சேலை கட்டி வந்தாள் செந்தாமரை' என்றால் பொருத்தமாக இருக்கும்; சென்னியப்பன் எப்படி சேலை கட்டி வருவான்?

சட்டமன்றத்திற்குள்ளே நுழைந்ததும். இலட்சியத்தை விட்டு விடுங்கள்' என்று கூறுவது இந்துப் பத்திரிகைக்கு எங்கள்மீதுள்ள அக்கறையினாலா அல்லது திராவிட நாட்டு இலட்சியத்தின் மீதுள்ள கோபத்தினாலா என்பது தெரியவில்லை.

திராவிட நாடு கேட்பதால்தான் நான் காஞ்சிபுரத்தில் தோற்றேன் என்றால், டாங்கே தோற்றது எதனால்?—அவர் நாட்டுப் பிரிவினை கேட்டாரா? பேராசிரியர் ரங்கா ஏன் தோற்றார்?—அவர் தனிநாடா கேட்டார்? அசோக்மேத்தா தோற்றது எப்படி? திரிலோக்சிங் எதனால் தோற்றார்?

எதிர்க்கட்சித் தலைவர்களையெல்லாம் வீழ்த்தினார்கள் காங்கிரசுக்காரர்கள் என்றால்தான், வெளிநாட்டில் அவர்களுக்கு மதிப்பு! அதனால்தான் திட்டமிட்டுகோடிக் கணக்கில் பணத்தைச் செலவிட்டு லோகியா, அசோக்மேத்தா போன்ற தலைவர்களையெல்லாம் வீழ்த்தியிருக்கிறார்கள்!

'அசோக் மேத்தாவின் ஐந்து விரலுக்குள் புள்ளி விவரங்கள் அடக்கம்' என்பார்களே! கிருபளானி என்ன?- காங்கிரசிலே பக்தி குறைந்தவரா? அவர் நாக்கு நுனியிலே நாகரிகம் நடமிடுவதாகக் கூறுவார்களே. பாராளுமன்றத்தில் கிருபளானி பேச ஆரம்பித்தால் எல்லோரும் எழுந்தா வெளியே வந்துவிடுவார்கள்? அவர் பேசுகிறார் என்றாலே பண்டித நேரு தன் காதை கூர்மையாக்கிக் கொண்டு கவனமாகக் கேட்பாரே!

திட்டமிட்டுச் சதி செய்து, 'எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் கூட வெற்றி பெறாமல் செய்துவிட வேண்டும்' என்று, அகில இந்தியாவிலும் வேலை செய்திருக்கிறார்கள். பி. எஸ். சின்னதுரை ஏன் தோற்றார்?—இப்படி, உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் மக்கள் மதிக்கும் தலைவர்கள் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அமெரிக்கப் பத்திரிகைகளிலெல்லாம், காங்கிரசு தோற்றதைவிட, எதிர்க்கட்சித் தலைவர்கள் தோற்றதைப் பற்றித்தான் பெரிதுபடுத்தி எழுதுகிறார்கள். வெளிநாட்டுக்காரர்கள், 'ஒரு காலத்தில் ஆட்சியைக் கைப்பற்றக்கூடிய எதிர்க்கட்சிகளாக இருக்கும் கட்சிகளின் தலைவர்களெல்லாம் வீழ்த்தப்பட்டுவிட்டார்கள்' என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

காங்கிரசு தோற்றதை வெளிநாட்டினர் அறிந்துகொண்டால், சொந்த ஊரிலேயே தோற்ற காங்கிரசை வெளிநாட்டில் மதிக்கமாட்டார்கள். அதனால்தான், எதிர்க்கட்சித் தலைவர்களின் தோல்வியைக்காட்டிக் காங்கிரசார் பெருமைப்படுகிறார்கள். இந்தத் தோல்வியைக்காட்டி இன்னும் கொஞ்சம் வெளிநாட்டில் பணம் கடன் வாங்கலாம்; இதைவிட வேறு உருப்படியான பலனைக் காங்கிரசு ஆட்சி பெறப்போவதில்லை!

நாங்களெல்லாம் என்றைக்கு வெற்றி பெற்றோமோ அன்றே எங்களையெல்லாம் வீழ்த்தவேண்டும் என்று திட்டமிடத் துவங்கிவிட்டனர். பத்திரிகைகளை நீங்கள் பார்த்தால் இது உங்களுக்குத் தெரியும். கடந்த ஐந்து ஆண்டுக்காலமாக அமைச்சர்கள் அதிகமாகச் சுற்றுப்பயணம் செய்த இடங்கள் எவை என்றால், நாங்கள் வெற்றிபெற்ற தொகுதிகளாகத்தான் இருக்கும். இதுபற்றி சட்டமன்றத்திலும் நாங்கள் பேசியிருக்கிறோம். அமைச்சர்கள் எங்கள் தொகுதிக்கு வந்தால் எங்களை அழைப்பதில்லை. நாங்கள் யாரைத் தோற்கடித்தோமோ அவர்களைத் தங்கள் காரில் ஏற்றிக்கொண்டு செல்வார்கள். கிராம மக்களிடம் சென்று, 'பார்த்தீர்களா, இவரை நீங்கள் தோற்கடித்துவிட்டீர்கள்; அடுத்தமுறை இவரை நீங்கள் தேர்ந்தெடுத்தால்தான் உங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்வோம்; ஏரிகளில் தூர் எடுப்போம்; குடிநீர் வழங்குவோம்' என்றெல்லாம் சொன்னார்கள்.

இப்படிப்பட்ட செயல்களினால் காங்கிரசுக்குக் கிடைத்த வெற்றிதான் இது. இனி இதே வேலையில் அவர்கள் ஈடுபட வேண்டுமானால்

(6-ம் பக்கம் பார்க்க)

திராவிடன்

எதையுந் தாங்கும் இதயம் கொள்வோம்
எழிலார் திராவிடம் பெற்றிட உழைப்போம்

சென்னை | 10—3—62 | சனிக்கிழமை

கடற்கரைப் பேச்சும் இந்துவின் உபதேசமும்

——[(*0*)]——

சென்னைக் கடற்கரையில் மாவட்ட தி. மு. க. சார்பில் இந்தத் திங்கள் 4-ம் நாளன்று நடைபெற்ற பாராட்டுவிழாக் கூட்டத்தில் நான் பேசியபோது கூறப்பட்ட கருத்தொன்று நாட்டில் பரவலான விமர்சனத்திற்கும் பல்வேறுபட்ட பொருள் சொல்லக்கூடிய நிலைக்கும் உள்ளாகியிருக்கிறது.

தேர்தலில் வெற்றி தோல்வியென்பது சகஜம். எந்தக் கட்சியில் யார் போட்டியிட்டாலும், போட்டியிடும் கட்சிப் பிரதி கட்சிகளின் வேட்பாளர்களுக்கிடையே வெறுப்பு என்பதோ அல்லது பகமை உணர்ச்சி என்பதோயில்லாமல் தேர்தல் நடைபெறவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டவன் நான். இதனை மனசாட்சியுள்ள எதிர்க்கட்சியினரும் நன்கு அறிவர். இன்னும் சொல்லப்போனால் என்னை எதிர்த்து நின்ற காங்கிரஸ் வேட்பாளரின் பெயரைக்கூட கழக மேடைகளில் சொல்லக்கூடாது என்ற வேண்டுகோளை விடுத்து அதைக் கடைப்பிடித்து வந்துள்ளதை அனைவரும் அறிவர்.

எனவே எந்த ஒரு அமைச்சர் மீதும் எனக்குத் தனிப்பட்ட துவேஷம் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அவர்களின் அந்தஸ்து பொறுப்பு ஆகியவைகளைக்கூட எண்ணிப்பார்க்காமல் மிகமிக கீழ்த்தரமான செயல்களில் அமைச்சர்கள் ஈடுபடுவதென்பது அரசியல் தர்மமாகுமா? தமிழகக் காங்கிரஸ் தலைவர் இவ்விதம் ஈடுபட்டால்கூட நான் குறைசொல்லமாட்டேன். அமைச்சர்கள் பொதுவான நிலையில் நின்று பணியாற்ற ஓரளவு கட்டுப்பட்டவர்கள். அவர்கள் தேர்தல் பணியில் ஈடுபடும்போது அதிகார பலமும் கூட்டு சேருகிறது என்பதை அரசியல் விவேகம்படைத்த ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதாகும்.

தங்களது பொறுப்புக்கும்—ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கும் மாறாக நடக்கும் அமைச்சர்களுக்கு சரியான புத்திசொல்ல வேண்டும் என்பதுதான் நான் பேசியபோது எடுத்துரைக்க நினைத்த கருத்து. அந்தக் கருத்தை வலியுறுத்திச் சொல்லும் போக்கில், உணர்ச்சிவயப்பட்டு கொச்சையாக குறிப்பிட்டேன். உடனே அருகில் அமர்ந்திருந்த அண்ணா அவர்கள் எனது வார்த்தையில் இருக்கும் தவற்றினை எடுத்துக்காட்டியதும், அதற்காக உடனடியாக மேடையிலேயே வருத்தம் தெரிவித்து, குறிப்பிட்ட அந்த வார்த்தையைத் திரும்பப் பெற்றுக்கொண்டேன்.

அதற்குப் பிறகும், நான் சொன்ன அந்த வார்த்தையை மட்டும் வைத்துக்கொண்டு, 'இந்து'. 'மித்திரன்' போன்ற இதழ்களும் மற்றும் சில ஏடுகளும் திரிபான செய்திகளை வெளியிட்டும், புத்திமதி சொல்லக்கூடிய வகையில் தலையங்கங்கள் தீட்டியும் தங்கள் மேதாவிலாசத்தைக் காட்டிக்கொள்ள முனைந்திருக்கின்றன.

இதே நேரத்தில் கேரள முதலமைச்சர் திரு. தாணுப்பிள்ளை அவர்கள், தமது சுற்றுப்பயணத்தின்போது கல்லால் தாக்கப்பட்டார் என்ற சேதியும் சேர்ந்து எனது வார்த்தைக்கு பெரிதும் விமர்சனைச் சேர்த்துவிட்டிருக்கிறது.

யார் எப்படி விமரிசனம் செய்தாலும், நான் உண்மையிலேயே அமைச்சர்கள் அனைவரும் கல்லடிபடவேண்டும் என்றோ, அல்லது அத்தகு கீழ்நிலைக்கு மக்கள் தயாராகிவிடவேண்டுமென்றோ, கருதிச் சொல்லவில்லை—அந்தக் கருத்தை யார் சொன்னாலும் ஆதரிப்பவனல்ல என்பதைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோது,

உண்மையிலேயே நடைபெறவேண்டும் எனக் கருதிச் சொல்லாத எனது வார்த்தையொன்றை வைத்து புத்திமதிகள் கூறவும், நான் சார்ந்துள்ள கழகத்தின் பொதுப்படையான பெயரையும் அதில் இணைத்துப்பேசவும் புறப்பட்டுள்ள 'மேதாவிகள்' அமைச்சர்கள் செய்த—செய்துவரும் அக்கிரமங்களுக்கு அணைபோட்டதுண்டா?

ஒழுக்க விதியுடனும், அமைதி குலையாத வகையிலும் நடத்தையைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பது எல்லோர்க்கும் பொதுவான சட்டமாகும். ஆனால், அமைச்சர்கள் இந்தச் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்களாகவே தங்களை நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதும், பிறருக்குப் புத்தி சொல்வதே தொழிலாகக் கொண்டுள்ள இந்து போன்ற இதழ்களுக்கு அதனை எண்ணிப்பார்க்க நேரமில்லையா என்று கேட்கிறேன்.

அமைச்சர்களாகப் பதவி வகிப்போரின் ஆகாத செயலைக் கண்டிக்க முனையும் அத்தனைப்பேருக்கும், 'அமைச்சர்களைத் தேர்தலில் வாக்குச் சீட்டுக்களின் மூலம் தோற்கடிப்பதுதான் இன்றைய நிலையில் அவர்களுக்கு அளிக்கக்கூடிய நாகரிகமான தண்டனை' என்ற போக்கில் வாதம் எழுப்பப்படுகிறது!

இது, அனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதும், நாகரீகத்தின் பாற்பட்டதுமாகும் என்பதில் ஐயமில்லை.

எனினும், நாகரிகமாகத் தண்டனை விதிக்க மக்களுக்குக் கிடைத்துள்ள சாதனமான தேர்தலில் அமைச்சர்களின் அநாகரிகமான குறுக்கீடு இல்லாமலிருக்கிறதா?

தேர்தலில் போட்டியிட்ட எந்த அமைச்சராவது, தாம் ஓர் வேட்பாளர் என்ற முறையிலேயே வாக்காளர்களை அணுகியதாக இந்தப் பத்திரிகைகள் உளப்பூர்வமாகச் சொல்ல முடியுமா?

'அமைச்சர் போட்டியிடுகிறார். ஆகவே அவருக்கே வாக்களியுங்கள்' என அதிகாரிகளே 'தண்டோரா'போட்டதும் மற்ற அநீதிகளும் இந்த மாநிலத்தின் பல்வேறு தொகுதிகளிலும் குறிப்பாக காஞ்சீபுரத்திலும் வெறியாட்டம் போட்டபோது, அதனைக் கண்டித்து, 'நாகரிகத் தண்டனை'யை அளிக்க இந்தப்பத்திரிகைகள் ஏன் முன்வரவில்லை!

சட்டம் அமைதி ஆகியவைகளைக் காப்பாற்றும் அமைச்சர் ஒருவர், தாம் போட்டியிட்ட தொகுதியில் பயங்கரத்தையும்—பீதியையும் உண்டாக்கியே வாக்கினைக் கேட்டார் என்று எதிர்க்கட்சிகள் முறையிட்ட போது, இந்தப் பத்திரிகைகள் செவிசாய்த்ததுண்டா?

ஓமந்தூரார், ஆச்சாரியார், குமாரசாமி ராஜா ஆகியோர் முதலமைச்சராக இருந்தபோது நடக்காத அநீதிகளை, தற்போதய முதலமைச்சரால் சாதாரண வாக்காளர்கள் அனுபவித்தார்கள் என்பதை எதிர்த்து இந்தப் பத்திரிகைகள் குரல் கொடுக்கத் தவறியது ஏன்?

'மூன்று படி அரிசி கொடுப்பதாகச் சொல்லும் தி. மு. க.வினர் இப்போது ஏன் கொடுக்கவில்லை என்று 'முகத்தில் அறைந்து கேளுங்கள்' என்று முதலமைச்சர் தேர்தல் காலத்தில் மூலைக்கு மூலை வெறித்தனமாகப் பேசியபோது இந்தப் பத்திரிகைகள் என்ன செய்து கொண்டிருந்தன?

அமைச்சர்கள் பேச்சுக்கு ஒரு பொருளும், அதே வார்த்தையைப் பிறர் பேசுகையில் ஏற்படுவதாகக் கருதும் விளைவுகளும் தங்கள் தங்கள் மனதுக்கு ஏற்றாற்போல, கற்பனை செய்துகொள்ளும் தீய பழக்கத்தை இனியாவது இந்து மித்திரன் போன்ற இதழ்கள் விட்டுவிட வேண்டும் என்று, நானும் ஓர் இதழாசிரியன் என்ற முறையிலே அறிவுறுத்த விரும்புகிறேன்.

பல திங்களுக்கு முன்னால், வண்ணைப்பகுதியில் பொதுக்கூட்டத்தில் பேசுவதற்கு வாய்ப்பு பெற்றுவிட்ட உற்சாகத்தில், ஓர் அமைச்சர் பேசினார்.

தி. மு. க.காரர்கள் தங்களுக்கு தலைமை நிலையம் என்று ஒரு கட்டடத்தை இங்குதான் சமீபத்தில் எங்கோ வைத்துக்கொண்டிருக்கிறார்களாம். அந்தக் கட்டடத்தை ஒரே இரவில் கொளுத்தித் தரைமட்டமாக்கும் சக்தி காங்கிரசுக்கு உண்டு' என்று கர்ஜித்தாராம். அப்போதும் பத்திரிகை நிருபர்களும், போலீசுக்காரர்களும் அங்கு இல்லாமற் போகவில்லை. ஆனால், இதுபற்றி கண்டிக்க 'இந்து' போன்ற பத்திரிகைகளுக்கு உணர்வு இருக்கவேண்டாமா?

இல்லை. ஆனால், நான்—தேர்தலில் அமைச்சர்கள் நடந்து கொண்ட முறையற்ற போக்கை நேரடியாக அனுபவித்த நான்—எனது கருத்தை எடுத்துச்சொல்ல முனைந்தபோது வெளிவந்த வார்த்தையை பெரிதுபடுத்த முனைந்துவிட்டது இந்தப் பத்திரிகைகள்!

சட்டபூர்வமான அனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முறைகளிலிருந்து நான் இதுவரை மாறுபட்டவனுமல்ல, இனி மாறுபடப்போவதுமில்லை. காங்கிரசின் வெறிச்செயலுக்கும் ஆளவந்தாரின் அடக்குமுறைக் கொடுமைகளுக்கும் கழகத் தோழர்கள் ஆளாகி—ஏன் பலியாகியிருக்கிறார்களே தவிர பழிதீர்த்துக்கொள்ளும் எந்த ஒரு செயலிலும் தி. மு. கழகத்தினர் ஈடுபட்டதில்லையென்பதை அரசினரின் ஒற்றர்களே அறிவர், அந்த நெறியிலிருந்து சிறிதும் தவறமாட்டேன். இதனை 'இந்து' போன்ற ஏடுகளுக்கு அல்ல நான் சொல்லுவது கழகத்தை வளர்த்துவரும் மகத்தான மக்கள் மன்றத்திற்கு, எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்பதுதான் எனது தலைவர்—கழகப் பொதுச்செயலாளர் அண்ணா அவர்கள் வற்புறுத்திச்சொல்லும் கட்டளையே தவிர, 'எதையும் எதிர்க்கும் குணம் வேண்டும்' என்பதல்ல.

அறிஞர் அண்ணா அவர்கள் இருக்கும்வரை, இந்த நாட்டு அமைச்சர்களுக்கும், அநியாயத்தில் இறங்கும் மற்றவர்க்கும் சட்டபூர்வமாக அல்லாது மற்ற துறைகளில் எவ்விதத் தீங்கும் நேராது. நேர முடியாது.

என்னைப் பொறுத்தவரை இன்னல்களையும் துன்பங்களையும் ஏற்றுப் பொறுத்தவாறே பொதுவாழ்வில் இத்தனை நாளும் இருந்து வருகிறேன்.

என்றாலும், அமைச்சர்களாக இருப்பதாலேயே பலாத்காரத்தைத் தூண்ட அவர்களுக்கு உரிமையளிக்கப்படுகிறதா? கிருபளானியை ஆதரித்து எழுதும் பத்திரிகை அனுபவத்தின்மேல் படையெடுப்பு நடத்துங்கள் எனக் கூச்சலிட்ட, டெல்லி உதவி அமைச்சருக்குக் கூறாத விமர்சனம், எனது பேச்சுக்கு மட்டும் கூற முன்வந்த இதழ்கள் எப்போதுமே திருந்தமுடியாதா?

போலீஸ் அமைச்சர் போட்டியிட்ட தொகுதியில் நடைபெற்ற அமைதி குலைவான செயலை எவ்வித விமர்சனமும் இன்றி இந்த இதழ்கள் ஏற்றுக்கொள்கின்றனவா?

முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள ஒருவர் சென்னைத் தொகுதிகளில் நடந்துகொண்ட போக்கு சட்டத்திற்கும்—நியாயத்துக்கும் உற்பட்டதுதானா? இவைகளைக் கேட்க நான் மட்டுமல்ல, நாடே விரும்புகிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

மித்திரனுக்குக் காமாலே?

தேசீய முகாமினர் தமிழகத்தில் அண்மையில் நடைபெற்ற தேர்தலின் படிப்பினையை நன்கு உணர்ந்து அறிவு பெறுவதற்கு பதிலாக அசட்டுத்தனமான வியாக்கியானங்களில் இறங்கியிருக்கின்றனர். இவ்வித வியாக்கியானங்களினுல் காங்கிரசின் சீர்குலேந்த ஆட்சி முறைக்கும் குறிப்பாக வடவர் ஏகாதிபத்யத்திற்கும் நாட்டில் ஏற்பட்டுள்ள வெறுப்புணர்ச்சியை மறைத்துவிடலாம் என்று அவர்கள் மனக்கோட்டைக் கட்டுகின்றனர்.

தமிழ்நாட்டுக் காங்கிரசார் இனியும் உண்மையை மறைத்து வீம்பு பேசுவதால் காங்கிரசுக்கு மேலும் பேரழிவைத் தேடிக்கொண்டதாக முடியப்போகிறதேயல்லாது திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியையோ அல்லது திராவிடநாட்டுத் தனிஉரிமைக்கு மக்களின் ஆதரவு பெருகிவருவதையோ தடுத்துவிட முடியாது.

என்ருலும் • ஆளும் வர்க்கத்திற்குத் துதிபாடி அவர்களின் அநாகரீகச் செயலுக்குக் குனிந்து கொடுத்து வயிறு வளர்க்கும் கும்பல் என்றைக்குமே உண்மையை மதிக்கும் புத்தியைப் பெறப்போவதில்லே. ஏனெனில், கைக்கூலிக்கும், லேசென்ஸ் பரமிட்டுக்கும் நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு திரியும் அந்தக் கும்பலுக்கு அரசியலேப் பற்றியோ மக்களின் வாழ்வைப்பற்றியோ அக்கறையிருக்க முடியாதல்லவா?

ஆனுல் அந்தக் கும்பலில் 'சுதேசமித்திரன்'' இடம் பெற்றிருப்பது வருந்தத்தக்கதாயிருக்கிறது. தனித்திராவிடம் அல்லது தமிழ்நாட்டை அமைக்கும் கொள்கையை தி. மு. கழகம் கைவிடவில்லேயென்ருல் அடுத்த பொதுத்தேர்தலில் மக்கள் தி. மு. கழகத்தை ஆதரிக்கமாட்டார்களாம்! மித்திரனின் அபார கண்டுபிடிப்பு இது!

தேர்தலுக்கு முன்னதாக அமைச்சர் சுப்ரமண்யம் இதுபோன்றே முகாரி ராகம் பாடினுர். சட்டமன்றத்தில் அவர் அறிஞர் அண்ணுவிற்கு அறைகூவல் விட்டார்! திராவிடநாட்டுப் பிரச்சினையை தேர்தல் திட்டமாக வைத்துப் போட்டியிடத் தயாரா என்று! அவ்விதம் போட்டியிட்டால் தி. மு. கழகம் படுதோல்வி அடையும் என்று கொக்கரித்தார்.

தி. மு. கழகம் தேர்தல் அறிக்கையில் திராவிடநாட்டுத் தனி உரிமையை தலேயாய திட்டமாக முன்வைத்துத் தேர்தல் பணியில் இறங்கிற்று. மகத்தான வெற்றியும் பெற்றது. அதற்குப் பிறகாவது தமிழக மக்களின் மனுேநிலேயை உணரும் புத்தி மித்திரனுக்குக் கூட ஏற்படவில்லேயென்ருல், எத்தகைய குட்டையில் மித்திரன் உழலுகிறது என்பதை எண்ணி பரிதாபப்படுகின்ருேம்.

இந்நிலேயில் மித்திரன் கழகத்திற்கு உபதேசம் செய்கிறது. தமிழ் நாடு தனி அரசாக அமையுமானுல் அதனின் உற்பத்திப் பொருளுக்கு "மார்க்கெட்டு" குறைந்து விடுமாம்! காமராசர் இதுபோன்ற பேச்சைப் பேசினுல் கவலேப்பட மாட்டோம்! அவரின் தரம் அவ்வளவுதான் என்று!

ஆனுல் 60 ஆண்டு காலம் அரசியலில் அனுபவம் பெற்றுள்ளதாகப் பெருமை பேசிக்கொள்ளும் மித்திரனுக்கும் அதே புத்திதான் என்ருல் காங்கிரசின் கோயபல்ஸ் பிரச்சாரப் படையிலே மித்திரனும் வேலே செய்ய குத்தகை போயிருக்கிறதோ யென்று ஐயுறுகிருேம்.

தமிழ்நாட்டைவிட எல்லா அந்தஸ்திலும் பிற்பட்ட ஏன் அளவிலும் மிகச் சிறியதான நாடுகளெல்லாம் தனி உரிமை பெற்று வாழ்வது மட்டுமல்லாமல், உலக நாடுகளில் அவைகளுக்கு வியாபாரப் பெருக்கங்கள் இருந்து வரும்போது தமிழ்நாட்டுக்கு மட்டும் அந்தப் பெருமையும் உரிமையும் கிடைக்காது என்று வாதிப்பது எவ்வளவு பேதமை யென்பதை நாம் விவரிக்கத் தேவையில்லே.

அடுத்து, சென்ற பொதுத் தேர்தலுக்கு முன் 15 இடங்களில் அங்கம் வகித்த தி. மு. கழகம் அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திராவிட நாட்டுத் தனி உரிமைக் கொள்கையை தேர்தல் அறிக்கையில் வலியுறுத்தி வாக்காளர் முன் வைக்கப்பட்டது. அந்தக் கொள்கையை வரவேற்று சட்டமன்றத்திற்கு 50 இடங்களிலும், பாராளுமன்றத்திற்கு 7 இடங்களிலும் வெற்றி கிடைத்துள்ளதென்ருல் வடநாட்டு ஏகாதிபத்தியப் பிடிப்பிலிருந்து நம் தாயகம் விடுபட வேண்டும் என்ற கொள்கையை ஆதரித்துக் கிடைத்த வெற்றிகளே ஆகும். எனவே காங்கிரசின் ஆதிபத்திய வெறி உடனே அகற்றப்பட வேண்டும் அதற்கேற்ப தங்களின் பிடிப்பை—நப்பாசையை இந்தியப் பேரரசு தானுகவே தளர்த்திக் கொள்ள வேண்டும்.

இந்த அறிவுரையை மித்திரன் வகையராக்கள் டெல்லி மூலவர்களுக்கு எடுத்துக்கூறுவதற்கு பதிலாக தி. மு. கழகம் திராவிட நாட்டுத் தனி உரிமைக் கொள்கையை கைவிட வேண்டும் என்று மித்திரன் தனது 2-3 62ம் நாள் தாயகத்தின் மூலம் உபதேசம் செய்கிறது!

கழகத்தின் மகத்தான வெற்றி மித்திரன் வகையராக்களின் உள்ளத்தில் அவ்வளவு எரிச்சலே உண்டாக்கி யிருக்கிறது. இல்லேயென்ருல் 60 ஆண்டு அனுபவம் பெற்றதாகப் பெருமை பேசிக்கொள்ளும் மித்திரன் இவ்வளவு கீழ்த்தரமான நிலேக்கு ஆளாகி அரசியல் விவேகத்தை இழந்திருக்குமா?

கழகம் பெற்றுள்ள மகத்தான வெற்றியிலிருந்து விளங்கும் படிப்பினையை உணர்ந்து பார்க்கும் கண்ணுேட்டத்தை இழக்கும் அளவுக்குமித்திரனுக்குகாமாலே வியாதி கண்டிருப்பது கண்டு உண்மையிலேயே அனுதாபப்படுகிருேம். மித்திரன் தனது வியாதியை குணப்படுத்திக்கொள்ள முனையுமாக மித்திரன் வகையருக்களே அரசியல் உலகில் எவ்வளவு தகிடுதத்தங்களேச் செய்தாலும் எதிர்காலத்தில் அவைகளின் ஆதிக்கம் அழியப்போவது உறுதி!

காங்கிரசுக் கட்சியின் அநீதப் போக்கு

ஜனசங்கம் தரும் தகவல்

——(0)——

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி சட்டவிரோத வழிகளேயும், ஒழுங்கீனங்களேயும் கடைப்பிடித்ததாக ஜனசங்கத்தின் மத்திய செயற்குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

இக்குற்றச்சாட்டுகளேக் குறித்து ஆய்ந்தறிய எழுவர் குழுவொன்றையும் அச்செயற்குழு அமைத்துள்ளது.

இதுபற்றி அவர்கள் நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றில் கூறப்பட்டுள்ளதாவது :—

''தேர்தல்கள் மக்களுக்கு அறிவூட்டும் ஒரு வழியாகவும், நாட்டின் விருப்பத்தை அறிவதற்கு ஒரு கருவியாகவும் அமைவதற்கு உரியன; ஆனுல், தான் தொடர்ந்து ஆட்சியில் இருப்பதற்கு வசதியாகக் காங்கிரசுக் கட்சி சட்டவிரோத நெறிகளேயும் ஒழுங்கீனங்களேயும் கையாண்டதுடன், பெரும் அளவில் அதிகாரத் துஷ்பிரயோகமும் செய்திருக்கிறது; இது வருந்தத்தக்கது.''

ஆளுங்கட்சியினரின் அட்டூழியம்

பொதுவுடைமைக் கட்சி குற்றச்சாட்டு

——(0)——

''ஆந்திரத் தேர்தலில் பல்வேறு தொகுதிகளில் காங்கிரசு அமைச்சர்கள் அதிகாரபலத்தை தவருன முறையில் பயன்படுத்தியிருக்கின்றனர். தேர்தல் செலவுக்கு என்று (தேர்தல் ஆணைக்குழுவால்) வரையறுக்கப்பட்ட எல்லேயை மீறி ஒவ்வொரு காங்கிரசு வேட்பாளர் செலவு செய்திருக்கின்றனர்'' என்று, ஆந்திர மாநிலப் பொதுவுடைமைக் கட்சிச் செயலாளர் என். இராஜசேகரரெட்டி குற்றஞ்சாட்டியுள்ளார்.

சாஸ்திரியாரின் அழுகை!

——[∴]——

''தி. மு. கழகம் போன்ற கட்சிகள் தம் நிலேயை உயர்த்திக் கொண்டது — சட்டமன்றங்களிலும், பாராளுமன்றத்திலும் தம் எண்ணிக்கையைப் பெருக்கிக்கொண்டது துரதிருஷ்டவசமானது'' என்று இங்கு ஈஸ்டர்ன் கோர்ட்டில் உள்ள செய்தியாளர் அறையைப் பார்வையிடவந்த உள்துறையமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி குறிப்பிட்டார்.

உடனே தேவை

திராவிடன் இதழுக்கு கீழ்க் கண்ட ஊர்களில் முன்பணம் கட்டக்கூடிய விற்பனேயாளர்கள் உடனே தேவை.

செங்கற்பட்டு	...	திருச்சி
காஞ்சிபுரம்	...	மணச்சநல்லூர்
குன்றத்தூர்	...	தொட்டியம்
மீஞ்சூர்	...	ஈரோடு
மதுராந்தகம்	...	கோவை
ஆம்பூர்	...	குன்னூர்
ஆண்டிமடம்	...	கணியூர்
ஆடுதுறை	...	பொள்ளாச்சி
மதுக்கூர்	...	வத்தலக்குண்டு
வேதாரண்யம்	...	கீழாவூரணி
நாகூர்	...	பரமக்குடி
திட்டக்குடி	...	சிவகெங்கை
திருவனந்தபுரம்	...	ராசபாளேயம்

விவரங்கட்கு
நிர்வாகி: திராவிடன்
163, வால்டாக்ஸ்ரோடு, சென்னே 1

நம் பிறப்புரிமை!

○

குருவிக்குக் கூடிருக்கக்
குயிலுக்கும் பொந்திருக்க
நரிக்குநற் புதரிருக்க
நத்தைக்கும் ஓடிருக்க;
திருவிடத்து மக்கள்மட்டும்
திண்டாடித் திரிவதுவா?
திராவிடத்தை மீட்டிடவேத்
தாண்டிடுவீர்! என்றதினுல்;

'துண்டிக்க நினேத்தாலும்
துவேஷத்தை ஊட்டினுலும்;
தண்டிக்க வேண்டு'மென்று
தக்கதொருச் சட்டத்தை;
பண்டிதரின் துணேக்கொண்டுப்
பக்குவமாய்த் தீட்டிவிட்டு;
மண்டலமும் கமண்டலும்
மகிழ்ச்சிக் கொண்டாடுதடா!

'என்நாட்டின் தனிஉரிமை
என்னுடைய பிறப்புரிமை!'
என்றேநாம் கூறிடுவோம்!
இன்னல்வரின் ஏற்றிடுவோம்!
நான்கல்ல; நாற்பதல்ல;
'நான்குலட்சம்' நாமிருக்க;
வான்போற்றும் வெற்றிநம்மை
வந்தடையும்! வெல்வோம் நாம்!

- இராமையன்
(கடலூர்)

மக்கள் மனதில் இடம் பெற்றுவிட்டோம் மகத்தான எதிர்க்கட்சியாக பணிபுரிவோம்!

பாதை தவறமாட்டோம்-பண்பு மாறமாட்டோம்!

——(0)——

நன்றி அறிவிப்பு நாளில் அறிஞர் அண்ணா

நமது கழகத்திற்கு 34 இலட்சம் மக்கள் வாக்களித்து 50 பேர்களைச் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். நமக்கு வாக்களித்த அத்தனை பேரும் எதைக் கருதி வாக்களித்தார்கள்?—சட்டமன்றத்திற்குப் போனால் உடனே இவர்கள் திராவிடநாடு பெற்றுத் தந்துவிடுவார்கள்' என்பதற்காக அல்ல; திராவிட நாடு பெறுவது ஒன்று மட்டுமே சட்டமன்றத்திற்கு நாம் செல்வதன் நோக்கமல்ல. உள்ளே நுழைந்ததும் கிடைத்துவிடக் கூடியதுமல்ல திராவிடநாடு.

தி. மு. கழகத்தவர், கொண்ட கொள்கையில் உறுதியுள்ளவர்கள்; ஆட்சியின் கேடுபாடுகளைக் கண்டிப்பவர்கள்; நிர்வாக ஊழல்களை அம்பலப்படுத்துபவர்கள் — என்பதையெல்லாம் எண்ணித்தான் அவர்கள் நமக்கு வாக்களித்திருக்கிறார்கள்.

நல்ல அரசியல் தெளிவு பெற்றவர்கள் — பக்குவப்பட்டவர்கள் சட்டமன்றத்திற்குள் செல்லவிருக்கிறார்கள்; எனவே தி. மு. கழகம் நல்ல பொறுப்புள்ள எதிர்க்கட்சியாகச் சட்டமன்றத்தில்தொடர்ந்து பணியாற்றும் என்பதை நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது கழகம் ஒரு விடுதலை இயக்கம்தான்: அதே நேரத்தில் சட்டமன்றத்திற்குள் செல்லும் போதும் வெளியே வரும்போதும் நமது தோழர்கள் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற முழக்கத்தோடு மட்டும் திரும்பிவிட மாட்டார்கள்—பொறுப்புள்ள எதிர்க்கட்சியினராகத்தான் பணியாற்றுவார்கள்; ஆட்சியின் நிர்வாக ஊழல்களை அம்பலத்துக்குக் கொண்டு வருவார்கள்; நீர்ப்பாசனத் திட்டங்களை வற்புறுத்துவார்கள்: விவசாயப் பிரச்சினைகளை விவாதிப்பார்கள்; மக்களுக்குத் தேவையான எல்லாப் பிரச்சினைகளையும் எடுத்துப் பேசுவார்கள்; 'இது ஒரு விடுதலை இயக்கம் தானே' எனக் கருதி, மற்றப் பிரச்சினைகளையெல்லாம் பேசாமல் விட்டுவிட மாட்டார்கள்''

நான் சட்டமன்றத்திற்குப் போகாததால் உள்ளே நமது தோழர்கள் எப்படி நடந்து கொள்வார்களோ என்று காங்கிரசுக்காரர் பயப்பட வேண்டாம். அமைதியே உருவான நாவலர் நெடுஞ்செழியன், அங்கே நான் செய்து கொண்டிருந்த வேலையைத் தொடர்ந்து செய்துகொண்டிருப்பார். ஐந்தாண்டுக் காலம் சட்டமன்றத்திலிருந்து நல்ல பயிற்சி பெற்றிருக்கின்ற தம்பி கருணாநிதியும் இருக்கிறார். எனவே, நல்ல பொறுப்புடனும் கடமை புணர்ச்சியோடும் நமது தோழர்கள் அங்கே பணியாற்றுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சர் காமராசருக்கும், அவருக்காகத் தேர்தல் பணிகளைச் செய்து அலுத்துப்போய் மருத்துவமனையில் ஓய்வுபெறும் பெரியாருக்கும் இப்போது ஏற்பட்டுள்ள பெருங்கவலை, நான் மீண்டும் உள்ளே நுழைந்து விடுவேனோ என்பதுதான். அவர்கள் இப்பொழுது கோட்டைக்குத் தாளிட்டு விட்டதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்—நான் விரும்பினால் இப்பொழுதும் நுழைய முடியும். ஆனால், அந்த அளவுக்கு என் தம்பிமார்கள் சோடைகள் அல்லர்; தாங்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை உலகம் அறிந்துகொள்ளத்தக்க வகையில் திறமையாகச் செயலாற்றுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்து பத்திரிகையின் தலையங்கம் குறித்து அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:

தேர்தல் முடிந்ததும், நாம் 50 இடத்தில் வெற்றி பெற்றது குறித்து 'இந்து' பத்திரிகை ஓர் தலையங்கம் எழுதிற்று; அந்தப் பத்திரிகையைப் பற்றி நான் குறை சொல்வதாகக் கருதவேண்டாம். அதன் வாதத்திலுள்ள தவறினைச் சுட்டிக்காட்டவே அதைப்பற்றி இங்கு சொல்ல விரும்புகிறேன்.

ஒருவருக்குத் திருமணமான பிறகு திருமணம் செய்துகொண்ட வாலிபரைப் பார்த்து, 'உனக்குத்தான் திருமணமாகிவிட்டதே; இனி நீ தெருத் திண்ணையில் படுத்துக்கொள்' என்று யாரும் சொல்ல மாட்டார்கள்; 'குடியும்குடித்தனமுமாகக் குழந்தை குட்டிகளுடன வாழ்க்கை நடத்து' என்றுதான் கூறுவார்கள்.

'நாம் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற இலட்சியத்துடன் தான் மக்களை அணுகினோம், தேர்தல் முடிந்ததும், இந்தப் பத்திரிகை சொல்லுகிறது— 'நீங்கள்தான் 50 பேர் வந்துவிட்டீர்களே; இனி ஏன் பிரிவினைக் கொள்கை? அதை விட்டுவிடுங்கள்' என்று!

திருமணமானவனைத் தெருத் திண்ணையில் படுக்கச் சொன்னது போலத்தான் இருக்கிறது 'இந்து'ப் பத்திரிகையின் புத்திமதி!

'இந்து'ப் பத்திரிகை போட்ட தப்புக் கணக்குப்பற்றி எண்ணிக் கழிவிரக்கப்படுகிறேன் நானும் ஒரு பத்திரிகைக்காரன் என்ற முறையில்.

நமது ஆன்றோரும் சான்றோரும் உச்சிமீது வைத்துப் பாராட்டிய திராவிடநாட்டின் தனிச்சிறப்பை— அதன் விடுதலை இலட்சியத்தை 50 பேர் சட்டமன்றத்தில் இடம் பெற்றுவிட்டதாலேயே விட்டுவிடுவோம் என்று 'இந்து'ப் பத்திரிகை எண்ணுவதற்குக் காரணம், அது எங்கள் மனப்பான்மையை—நாங்கள் செல்லும் பாதையை—நாங்கள் சொல்லும் தத்துவத்தைப் புரிந்து கொள்ளாததுதான் என்று எண்ணுகிறேன்.

மக்கள் இப்பொழுது எங்களைக் கவனிக்கிறார்கள்; நாங்கள் ஒரு கேள்விக் குறியாக இருக்கிறோம் என்பதற்கு அறிகுறிதான் இந்த 50 பேர்!

''நாங்கள், கொண்ட கொள்கையை விட்டுவிட அல்ல சட்டமன்றத்திற்குச் சென்றது. பாதை வழுவி நடக்காது தி. மு. கழகம்! இலட்சியத்தை அணுகியே அது செல்லுமே தவிர இழந்துவிடாது!'' என்று.

4-3-62 ஞாயிறன்று சென்னை மாவட்ட தி. மு. கழக சார்பில் திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் கூறினர்கள்.

(முழு விவரம் 2-ம் பக்கம்)

இந்தியாவுக்கு அமெரிக்காவின் பிச்சை!

மொத்தம் ரூ. 74 கோடி மதிப்புள்ள மூன்று கடன்கள் இந்தியாவுக்கு வழங்க அமெரிக்க அரசாங்கம் அனுமதித்துள்ளதாக அமெரிக்கத் தூதர் ஜான் கென்னத் காலபிரெய்த் இன்று இங்கு அறிவித்தார். மேற்சொன்ன தொகை 1366 லட்சம் டாலர் (ரூ. 65 கோடி) அந்நிய செலாவணியாகக் கிடைக்கும் பாக்கி ரூ 9 கோடி யு. எஸ். பொதுச்சட்டம் 480-ன் கீழ் இந்தியாவுக்கு வழங்கப்படும் பண்டங்கள் விற்பனையால் கிடைக்கும் பணத்திலிருந்து கடன் கொடுக்கப்படும்.

மேலே சொன்ன மூன்று கடன்களில் மிகப் பெரியது 10 கோடி டாலர் (ரூ. 466 கோடி) கடனாகும்; இது மிகவும் தேவைப்படும் தொழில்; விவசாயத் துறைப் பொருட்கள் இறக்குமதி செய்வதற்காக இந்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படுகிறது. குஜராத் மாநிலத்தில் காம்பே அருகில் துவாரன் என்னும் இடத்தில் 2,50,000 கிலோ வாட்மின் விசை உற்பத்தி செய்யும் அனல் மின் விசை நிலையம் ஒன்று நிறுவுவதற்கு ஆகும் செலவு முழுவதையும் ஈடு செய்வதற்காக இரண்டாவது கடன் ரூ. 25 கோடி கொடுக்கப்படும், இந்தக் கடனில் டாலர் செலாவணி 336 லட்சம் டாலர் (ரூ. 16 கோடி) இத்திட்டத்துக்கு ரூபாய்ச் செலாவணியில் ரூ. 9 கோடி செலவாகும். இது (பொதுச் சட்டம்) பி. எல். 480 நிதிகளிலிருந்து கடனாகக் கொடுக்கப்படும்.

பம்பாய் பிரிமியர் ஆட்டோ மோபைல்ஸ் லிமிடெட், மூன்றுவது கடனைப் பெறுகிறது. இது 30 லட்சம் டாலர் (ரூ. 14 கோடி) ஆகும். முன்பு கொடுக்கப்பட்ட யு. எஸ். அரசாங்கக் கடன் 720 லட்சம் டாலர் போலவே, புதிய கடன் தொகையையும் அக்கம்பெனிகாரர்கள், டிரக்குகள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய இயந்திரங்களை அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு பயன்படுத்தும்.

கடன்களின் விவரம்

10 கோடி டாலர் கடன் குறிப்பிட்ட திட்டம் எதற்கும் இந்தக் கடன் வழங்கப்படவில்லை. நாட்டில் மூலதனம் உருவாவதற்கும், வளர்ச்சி குறையாமலிருப்பதற்கும் இன்றியமையாத சில குறிப்பிட்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இந்தக் கடன் இந்திய அரசாங்கத்துக்கு உதவும். ரசாயண உரங்கள், இரும்பு அல்லாத உலோகங்கள், செயற்கை ரப்பர், டயர் முறுக்கு—நூல், கார்பன் கரி, கந்தகம், மரக்கூழ். இயந்திர உறுப்புகள் போன்ற தொழில் துறைப் பொருள்கள் ஆகியவற்றை அமெரிக்காவில் வாங்க இது பயன்படுத்தப்படும், கடனின் கீழ் என்னென்ன வரவழைப்பதென்று இந்திய அரசாங்கம் முடிவு செய்யும்.

காம்பே அனல் மின்விசை நிலையத்துக்கு ரூ. 25 கோடி; காம்பே அருகில் நிறுவப்பட இருக்கும் 2,50,000 கிலோ, மின்விசை உற்பத்தி செய்யும் அனல் மின்விசை நிலயம் இந்தியாவிலுள்ள மிகப்பெரிய நிலையங்களில் ஒன்றாகும். அமெரிக்க உதவியுடன் இந்தியாவில் நிறுவப்படும் மூன்றாவது இரண்டரை லட்சம் கி. வா. மின்விசை நிலயமாகும், காம்பே நிலயம். மற்றவை இரண்டில் ஒன்று, தாமோதர் பள்ளத்தாக்கில் சந்திரப்புரா என்னுமிடத்திலும், [illegible] சார் என்னுமிடத்திலும் நிறுவப்பட்டுவருகின்றன. இந்நாட்டில் நிறுவப்பட்டுவரும் மற்றும் ஏழு அனல் மின்விசை நிலயங்களுக்கும், நீர் மின்விசை நிலயங்களுக்கும் யு. எஸ். அந்நியச் செலாவணிக் கடன் கொடுத்துள்ளது பி. எஸ். 480 நிதிகளின் கீழ் பல்வேறு மின்விசைத் திட்டங்களுக்கு அது ரூபாய்க் கடன்கள் கொடுத்துள்ளது.

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

வணக்கம். பிப்ரவரி முடிய பட்டியல் அனுப்பட்டிருக்கிறது. அதற்கான தொகையை உடன் தவருது அனுப்பிவைத்தால்தான் மேற்கொண்டு பத்திரிகை அனுப்ப இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

— நிர்வாகி, திராவிடன்

பணிவன்பான நன்றி.

கடலூர் பாராளுமன்றத்தொகுதியில் கழக சார்பில் போட்டியிட்ட என்னை ஆதரித்துப் பெருவாரியான வாக்குகளை அளித்த வாக்காளர் பெருமக்களுக்கும் எனது வெற்றிக்குத் துணையாயிருந்த அனைவருக்கும் குறிப்பாக கழகத் தோழர்களுக்கும் இவ்வித வாய்ப்பினை அளித்த அறிஞர் அண்ணா அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகலந்த வணக்கத்தை இதன் வாயிலாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அன்பன்

இராமபத்திரன் எம்.பி.

கடலூர் என்.டி.

சட்டமன்ற - பாராளுமன்ற

கழக உறுப்பினர்கள் முதல் கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற—பாராளுமன்ற உறுப்பினர்களின் முதல் கூட்டம் 18—3—62 ஞாயிறு காலை 9 மணிக்கு சென்னை நுங்கம்பாக்கம் அவினியூ ரோடு, 9-ம் எண் (தாயகம்) இல்லத்தில், பொதுச்செயலாளர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம்

கேரளம் கேட்கிறதா என கேள்விக்குறி எழுப்புவோர்களே இதோ கேரளத்தில் விடுதலை முரசு கொட்ட வெளிவருகிறது மலையாள வார இதழ்.

படியுங்கள்! படியுங்கள்!

கேரளத்தின் பிரபல எழுத்தாளர்கள் எழுதும் கட்டுரைகள்!
சிந்தனையைத் தூண்டும் சிறுகதைகள்! தேன் துளும்பும் கவிதைகள்!
திராவிடக் கலையுலகக் காவலர் பலர் நேரில் எழுதும் கலைப்பகுதி.
நீரும்-நெருப்பும் என்ற சிறப்புக்கட்டுரை! கேள்வி பதில் பகுதி.
கண்ணைக்கவரும் வண்ண ஓவியங்கள்!
கருத்துச்செறிவுள்ள அரசியல் கேலிச்சித்திரங்கள்!
இத்தனையும் உள்ளடக்கி

மார்ச் 2-வது வாரத்தில் வெளிவருகிறது

திராவிட சக்தி

(மலையாள வார இதழ்)

ஆசிரியர்கள்:

எம். என். புருஷோத்தமன்

கே. எச். எம். சுபேர்

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை.

விவரங்களுக்கு:
மானேஜர். 'திராவிட சக்தி' (மலையாள வார இதழ்) கொச்சி-5.

3-ம் பக்கத் தொடர்ச்சி.........

நான் தேர்தலுக்கு நின்ற பேசின்பிரிட்ஜ் தொகுதியில் தேர்தல் தினத்தன்றுகூட முதலமைச்சர் காமராசர் தமது பதவி செல்லாக்கைப் பயன்படுத்தும் வகையில் நடந்துகொண்டதை அப்பகுதி மக்கள் அறிந்ததாகும். அவ்வித அநீதிகளில் அமைச்சர்கள் ஈடுபடுவது கற்காலமா அல்லது அதைவிட காட்டுமிராண்டித் தனமான காலமாயென்று ஆராய்ந்துபார்த்து ஆளும்வர்க்கத்திற்கு அறிவு புகட்ட 'இந்து'வுக்கு மனமில்லாதது ஏன் என்று கேட்கிறேன்.

உணர்ச்சி வயப்பட்டு தெரிவித்த ஒரு வார்த்தையை வைத்துக் கொண்டு உபதேசம் செய்ய புறப்பட்ட இந்தப் பத்திரிகைகளின் பாரம்பரியத்தை ஆராய்ந்துபார்த்தால், அன்றைய நாளில் எதிர்க் கட்சித் தலைவர்கள் முன்பும், அவர்களின் இல்லங்களின் மீதும் கல்வீசி கலகம் விளைவித்தவர்களையெல்லாம் தேசபக்தர்கள் என்று பாராட்டியிருப்பதையும் அசகாய சூரர்கள் என்று கூறி அவர்களுக்கு ஊக்கந் தந்திருப்பதையும் இந்நாட்டு அரசியல் வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் நன்கு தெரியவரும். அதுமட்டுமா திரைமறைவிலிருந்துகொண்டு பலாத்காரத்தைத் தூண்டிவிட்டு, வெளியே பத்தினிவேஷம் போட்டுப் பிழைத்துவந்த பத்திரிகைகளின் இழிச்செயலை யாரும் மறைத்துவிட முடியாது.

ஆனால் நான் மட்டுமல்ல கழகத்தைச் சார்ந்த எந்த ஒரு தோழரும்—அவ்வித ஈனத்தனமான செயலுக்கு இதுவரை ஆளாகியதுமில்லை, இனியும் ஆளாகமாட்டோம் என்பது உறுதி.

'இந்து'—'மித்திரன் போன்ற ஏடுகளுக்குக்கூறுகிறேன், அவைகள் புத்தி சொல்லும் அளவுக்கு நானோ மற்றுமுள்ள கழகத் தோழர்களோ கண்ணியத்தை இழந்துவிடமாட்டோம். எங்களின் தலைமை அவ்வளவு தூய்மையானது.

எனவே, இந்து—மித்திரன் போன்ற ஏடுகள் தேர்தல் காலங்களில் அமைச்சர்கள் மேற்கொள்ளும் ஜனநாயக விரோதமான காரியங்கள் எதிர்காலத்திலாகிலும் நடைபெறாதிருக்கும் வகையில் அமைச்சர்களுக்கு உபதேசம் செய்யட்டும். அதற்குத் துணிவில்லையென்றால் பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்ற முறையில் பிழைப்பை நடத்திக்கொள்ளட்டும். நாம் கவலைப்படப்போவதில்லை ஆனால் எனது கடற்கரைப் பேச்சின் ஒரு வார்த்தையை வைத்துக் கொண்டு ஒருதலைப்பட்சமாக உபதேசம் செய்வதுபோன்ற தொழிலில் ஈடுபடுவதென்பது நாய்வாலை நிமிர்த்தினாலும் நிமிர்த்தலாம், 'இந்து' போன்ற இதழ்களின் பிற்போக்கைத் திருத்தமுடியாது என்றுதான் அரசியல் விவேகம் படைத்தவர்கள் எண்ணுவார்கள்.

என்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளயிருப்பதாக இரண்டொரு இதழ்களில் வெளிவந்த செய்திகள் உண்மையாக இருப்பின், இக் கேள்விகளை மட்டுமின்றி மற்றும் தேர்தலின்போது அமைச்சர்கள் செய்த அட்டூழியங்களை எடுத்துக்காட்டி உரிய இடத்தில் உரியவர்களிடம் நீதி கேட்கவும் நாடு அதனை அறியவும் எனக்கு வாய்ப்பு கிடைத்தது என்று பெருமைப்படுவேன். வணக்கம்.

என்.வி. நடராசன்

அண்ணா பேச்சு தொடர்ச்சி

மற்றொரு 50 தொகுதிகளை அவர்கள் பட்டினிப் போடவேண்டும்.

எங்களைத் திட்டமிட்டு ஒழித்துக் கட்டுவார்கள் என்பதும் எங்களுக்கு முன்பே தெரியும். நமது நெடுஞ்செழியனிடமும், கருணாநிதியிடமும் பேசிக்கொண்டிருந்த போதுகூட நான் இதைச் சொல்லியிருக்கிறேன்.

தேர்தலுக்கு முன்பு நடந்த கூட்டத்தில் பேசுகையில்கூட நான் காங்கிரசுக்காரர்களுக்குச் சொன்னேன்—எங்களைத் தோற்கடிக்க உங்கள் முழு பலத்தையும் காட்டுவதால் மற்ற இடங்களைக் கோட்டைவிடப் போகிறீர்கள்! என்று; அதை அவர்கள் எண்ணிப்பார்க்கவில்லை. மற்ற இடங்களைத் துச்சமெனக் கருதினார்கள்; அதனால் அவற்றை அவர்கள் கோட்டைவிட நேர்ந்தது!

எப்படி—'உங்கள் 15 பேரையும் ஒழிப்போம்' என்று கூறி, 50 இடங்களைக் கோட்டைவிட்டார்களோ அதேபோல், அடுத்த தேர்தலில், 'இந்த 50 பேரையும் ஒழிப்போம்' என்று கூறி வேலை செய்வார்களானால் இன்னொரு 75 இடங்களைக் கோட்டை விடுவார்கள்! எனவே, இனி இந்த வேலையிலும் அவர்கள் வெற்றிபெற முடியாது!

ஓட்டை விழுந்த பானையில் புளியைவைத்து அடைத்தால் மற்றொரு பக்கம் ஓட்டைவிழ ஆரம்பிக்கும்.

காஞ்சிபுரத்தில் புளியை வைத்துத்தான் ஓட்டையை அடைத்தார்கள். ஏன் புளி என்று சொல்லுகிறேன் என்றால், புளியில் தண்ணீர் பட்டால் அது கரைய ஆரம்பிக்கும்—நிலைத்து நிற்காது! அதேபோல்தான், இவர்கள் அடைக்கும் ஓட்டை, நாளடைவில் கரைந்து மீண்டும் ஓட்டையாகும்.

ஆனைத் தேள் கொட்டினால், 'ஆ' என்று அலறுகிறான்; ஆனால், 'ஆனைவிடத் தேள் பெரியது' என்று யாரும் சொல்லமாட்டார்கள். அதைப்போல், நான் தோற்றதால் —தோல்வி என்னை அழுத்திவிடும் —என்று யாரும் கூறமாட்டார்கள். அடுத்தமுறை நான் நன்றாகப் பணியாற்றுவேன்."

காங்கிரஸ் ஏகாதிபத்தியம் கரைகிறது

—(...°...)—

சென்ற முறை பாராளுமன்றத்தில் காங்கிரசுக்குக் கிடைத்த இடங்கள்

364

இந்த முறை கிடைத்த இடங்கள்

338

இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் சென்ற முறை சட்டமன்றத்தில் காங்கிரஸ் பெற்றிருந்த இடங்கள்

2264

சாதனை சாதனை என்று வாய்வீரம் பேசி—அதிகாரம், அழுக்கேறுதநோட்டு ஆகியவற்றின் துணைகொண்டு இந்த முறை பெற்ற இடங்கள்

1781

புளுகினிச்சித்தர்களின் எழுத்துப்புரட்டு!

○

போலிப்புகழுரைகளுக்கும் வீண் பகட்டு மொழிகளுக்கும் ஆட்பட்டுவிட்டவர்கள்; மனிதச் சந்தையிலே விலை போகாச் சரக்குகளாகத்தான் திரிகின்றனர். நடைமுறை பாடங்களேயோ சரித்திரக் கருத்துக்களேயோ, வரலாற்று முடிவுகளேயோபற்றி சற்றும் எள்ளளவும் சிந்திக்காத மந்தைக்கூட்டமாக அந்த மனிதப் பம்பரங்கள் சுழல்கின்றன. ஆசை என்னும் கயிறு ஆட்டுவிக்க—ஆட்டுவிக்க, அவை வெட்கமறியாது ஆடுகின்றன. சராசரி சிந்தனைகளும் சரித்திர உண்மைகளும் சென்றெட்டா அந்த மூடிய உள்ளங்கள், உண்மையை என்றும் உள்ளே நுழைய விட்டுக் கொள்ளாத எஃகுக் கோட்டைகளாகத்தான் இருக்கின்றன. இந்த மொத்த உண்மைக்கும் ஒத்த உள்ளங்களாகத்தான் புதுக்கட்சியினரின் நெஞ்சங்கள் உள்ளன.

பொய்யைச் சொன்னவர்கள்—பரப்பியவர்கள் - கொட்டியவர்கள், மணிமகுடங்களை அணிந்ததில்லை; மதிப்பைப் பெற்றதில்லை; உலகெலாம் உணர்ந்த இந்த உண்மையை, புதுக்கட்சியினர் மட்டும் உணரவில்லை.

அதனால்தான் பொய்யிலேயே மாளிகைக் கட்டி வாழும் கற்பனை நினைவில் திரிகிறார்கள். படிக்காதவர்களையெல்லாம் அரசியலிலிருந்து அழித்தொழிக்கக் கருதுகின்ற வெறியால். பொய்யை—புனைசுருட்டை ஆயுதமாக்கி எதிரிகள் மேல் விட்டெறிகிறார்கள். நா காக்கும் பான்மை மறந்தனர்; அதனைப் பொய்யின் ஊற்றாக்கினர். நெஞ்சம் அறிந்து பொய் சொல்வதற்கு நாணயம் மிக்கவர்கள் நடுங்குகின்றனர். இவர்கள் அங்குதான் மொத்தப் பொய்களையும் உற்பத்தி செய்கின்றனர். மைக்கையும் பேனாவையும் துணைக்கருவிகளாகக் கொண்டனர். விளைவு பிறக்கும்போதே பொய்யில் பிறந்துவிட்டனர். தலைவர் முதல் தொண்டர் வரைக்கும் போகின்ற இடமெல்லாம் பொய்யை விதைக்க முற்பட்டார்கள். ஆனால் அறுவடைதான் ....

திருப்பரங்குன்றத்தில் ஒரு பேர்வழி. அந்த ஆள் புதுக்கட்சிக்காரராம். அவர் தன்னை யாரோ அடித்துவிட்டதாகக் காவல் துறையில் புகார் செய்ய, வழக்கு நீதிமன்றத்திற்கு வந்தது. சொந்தக் காய்ப்புகளால் எழுந்த சில்லரைத் தகராறுகளுக்கு அரசியல் வர்ணம் பூச நினைத்து, 'அடித்தவர்கள் தி. மு. கழகத்தினர்' என்று சொல்லினர். வழக்கை ஆய்ந்த நீதிபதி, குற்றச்சாட்டைப் பொய்ப் புகார் என ஒதுக்கித்தள்ளினார். குற்றவாளிகள் எனப்பட்டோர் தி. மு. கழகத்தவர் அல்லர் என்றும் சான்றும் உறுதிப்பட்டுவிட்டது. எனினும் இன்னும் அந்தப் 'புளுகுணிச் சித்தர்கள்' பொய்யையே பரப்பி வருகின்றனர்.

இன்னும் திருமணமே யாகாத மாறனுக்கு சுயசாதியிலேயே திருமணமாகிவிட்டதாகச் சரடுவிட்டார், மற்றொரு சித்தர். அவர் வாதத்தை பொய், முட்செடியாக உருவெடுத்து அவர் காலையே குத்திய பிறகுதான் அந்தப் பொய்யை விட்டார்.

பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்து. பொய்யிலே உழல்பவர்களின் நா, மறுமுறையும் சுழன்றிருக்கிறது!

தொண்டனைத் தீண்டிக் கட்சித் தோழனைத் தீண்டிச் சுவை பார்த்த விஷ நா, இப்போது தலைவனையும் சாடியிருக்கிறது!

புதுக்கட்சித் தோழர்களே இனியாவது உண்மையை உணர்ந்து, திருந்தி செயலாற்றுங்கள்.

——(0)——

'விடிவெள்ளி' என்ற அவர்கள் பொய்ப்பண்ணையில் புதுக்கட்சித் தலைவர்தான் தில்லிப் பாராளுமன்றத்தில் முதன் முதலாகத் தமிழில் பேசியதாக விளம்பரம் செய்தார்கள் பேபி கந்தசாமியின் தூய பணியை எடுத்துரைத்தபின்தான், அவர்களின் வாயடைத்தது.

"சிற்றரசு. 57 தேர்தலில் பொறுப்புத் தொகை இழந்தார்" என்று அவர்களது தலைவரே கூறினார். சிற்றரசே மண்டையிலடித்துவிட்ட பிறகுதான். மூலபலங்களின் வாய் மூடிற்று.

தொடக்கம் முதல், தொழிலாகப் பொய் பேசுவதையே கொண்டிருந்த அவர்கள், மீண்டும் அதையே தம் தொழிலாகவும் தொண்டாகவும் உறுதிப்படுத்திக் காட்டியிருக்கிறார்கள்.

அண்மையில் அண்ணா அவர்கள் 'இந்து'வின் செய்தியாளருக்கு அளித்த போட்டியில் திராவிட நாட்டுப் பிரச்சினைபற்றி தெரிவித்த கருத்தை வலிந்து திருத்திக் கூறியிருக்கிறது 'விடிவெள்ளி'.

"இலட்சியங்களின் மீது பரஸ்பரம் விட்டுக்கொடுத்தல் இல்லை எனும்போது, அந்த லட்சியங்களின் மண்டலத்திற்கு வெளியே உள்ள யாரேனும் ஒருவரால் பரஸ்பரத் தீர்வுகாண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் (அண்ணா) தெரிவித்தார்."

—இது இந்து ஏட்டுக்காரர் தந்திருக்கும் சேதியில் ஒரு பகுதி; ஆங்கில வாசகத்திற்கு உரிய சரியான பொருள்.

'விடிவெள்ளி'க்காரர், அண்ணா மீது மண்ணை வாரித் தூற்றவேண்டும் என்பதற்காகவோ — அடக்க முடியாத ஆத்திரத்தை எப்படியாகிலும் தீர்த்துக் கொள்வதற்காகவா, இப்பகுதியில் தன் கைச்சரக்கையும் சேர்த்து வெளியிட்டிருக்கிறார்; அண்ணாவை கொள்கைப்பிடிப்பற்றவராகவும் காட்ட முனைந்திருக்கிறார்,

"எங்களைப் பொறுத்தவரையில் இலட்சியத்தை விட்டுக் கொடுக்க இடமில்லை என்றாலும் இந்த இலட்சிய வட்டத்திற்கு வெளியிலிருப்பவர்கள் பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் ஒரு தீர்வினைக் காண முயற்சித்தால் அதனை வரவேற்போம்"

—இதுதான் 'விடிகொள்ளி'யாரின் கைவண்ணம் கலந்த மொழிபெயர்ப்பு!

சல்லடை போட்டுச் சலித்தாலும்—'வரவேற்றல்' என்ற தொடருக்கோ, 'ஒப்புக்கொள்ளுதல்' என்ற பேச்சுக்கோ, 'ஏற்றுக் கொள்ளுதல்' என்ற பொருளுக்கோ அடையாளமாக எதையும் அண்ணாவின் கருத்தில் காண முடியவில்லை. எனினும் அண்ணா வெளியாரின் முயற்சிகளை வரவேற்பதாகக் காட்டி மொழி பெயர்ப்பதேன்?

விடிவெள்ளி தான் இப்படி என்றால். அதன் தலைவரும் அப்படித்தான் இருக்கிறார். மாலையில் இப்படிக் கோயபல்ஸ் வேலையோடு வெளியான 'விடிவெள்ளி'யை எடுத்து, இரவில் நேப்பியர் பார்க்கில் பேசிய குட்டித் தலைவரும் தலையைச் சொரிந்துகொண்டிருக்கிறார்.

'இந்து' நிருபர் கேட்பதாவது நான் பொறுப்பதாவது? என் உயிரான திராவிடப் பிரச்சினையை அவர் விட்டுக் கொடுக்கும்படி கேட்பதாவது?" என்று அண்ணா கொதித்தெழுந்திருக்க வேண்டுமாம்!

"போடா போ! போக்கிரித்தனமா செய்கிறாய்? என்னிடமா வாலாட்டுகிறாய்?' என்று கேட்பதற்குப் பதிலாக, பிறர் முயற்சி செய்தால் வரவேற்பேன்!' என்று சொல்வது? 'கொள்கை என்ன, பேரம் பேசப்படும் வியாபாரப் பொருளா? இப்படிக் கேட்க உனக்கு எங்கிருந்தது வந்தது துணிச்சல்?' என்றல்லவா கேட்டிருக்க வேண்டும், திரு அண்ணாதுரை? மாறாக 'வரவேற்பேன்' என்று சொல்கிறாரே! இவரை எப்படி நம்புவது? இவர் கொள்கை வைத்துப் போராட்டம் நடத்துகிறாரா? கட்சி வைத்து வியாபாரம் செய்கிறாரா? எனின், இவருக்கே திராவிட நாட்டுக் கொள்கையில் நம்பிக்கையில்லை என்றாகிறதல்லவா? நாடே! நீ இவரையா நம்புகிறாய்?" இப்படி எல்லாம் 'விடிவெள்ளி'யின் தலைவர்—'தேசிய'க் கனல் கொழுந்து விட்டெரியும் தன் புத்தியைக் காட்டிக் கேட்டது:

"அண்ணாத்துரை அப்படியா சொன்னார்?" என்று விவரம் தெரிந்த மக்கள் யோசித்தார்கள். 'அப்படி அவர் சொல்லவில்லையே!' என்று 'இந்து'வின் செய்தியை நன்கு படித்தவர்கள் கூறினார்கள்.

எந்த நிலையிலும் நாட்டு விடுதலைக் கொள்கையைக் கைவிடுவதற்கில்லை என்று அண்ணா பேட்டியின் தொடக்கத்திலேயே திட்டவட்டமாக விளக்கியிருந்தும், பச்சைப் பொய்யை—படுபழியை இந்தக் கேடர்கள் தூக்கியெறிகிறார்கள்.

"'இந்து'வைப் படிக்காதவர்கள் இதுதான் உண்மை என்று தம் பேச்சைக் கேட்டுவிட்டு எண்ணுவர்கள். அண்ணாவைச் சந்தேகக் கண்களோடு பார்ப்பார்கள். மற்றவர்கள் எப்படிப்போனால் என்ன? ஏமாந்தவர்கள் வரையில் நமக்கு இலாபம்தானே!" என்ற எண்ணத்தில்தான்—எப்படியும் அண்ணாவைத் தூற்றவேண்டும் என்ற வெறியால்தான், புதுக்கட்சித்தம்பிரான் பொய்மழை பொழிந்திருக்கின்றார்.

கண்ணாடிக் கல்லுக்கு எத்தனைத்தான் பட்டை ஏற்றினாலும், அது வைரமாகிவிடாது.

திரைகவுள் கன்னத்திற்கு எத்தனைதான் வண்ணச் சாயம் பூசினாலும், அது பருவக்குமரியின் கன்னமாகிவிடாது.

காக்கைக்கு என்னதான் பட்டயம் கட்டிவிட்டாலும், அதன் கத்தல் குயிலின் குரலாகிவிடாது.

எழுத்திலே விளையாடுவோர்—சொல்லினைப் புரட்டுவோர்—இதையும் கவனிக்கட்டும்; திருந்தட்டும்!

புதுக்கட்சித் தலைவர் தனது பொய்க்கு என்னதான் அண்ணா பெயரை இழுத்தாலும், அவரது வார்த்தை எடுபடாது; வாசாலகம் விலைபோகாது.

போலிப் புகழுக்கும் வீண் பகட்டுக்கும் ஆசைப்பட்டலைவோர், நல்வழியறிந்து திருந்த இதுவே தக்ககாலம்!

- மா. பாண்டியன்

காயிதே மில்லத் மாபெரும் வெற்றி

——[∴]——

இந்திய முஸ்லீம் லீக் தலைவர் காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் கேரள மாநிலத்திலிருந்து பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதை எண்ணி பெருமகிழ்ச்சியடைகின்றோம். சென்னையிலிருந்தவாறே தமது வேட்பாளர் தாளை தோழர் மூலம் அனுப்பி பதிவு செய்தது மட்டுமின்றி தேர்தல் முடியும்வரை தமது தொகுதிக்குச் செல்லாமலேயே, காங்கிரசின் பாசீஸ வெறியை முறியடித்தார் என்றால் அவரைத் தேர்ந்தெடுத்த கேரள மக்களின் மனவளத்தையும் அரசியல் உணர்ச்சியையும் பெரிதும் பாராட்டுகிறோம். அத்தகு சிறப்புமிக்க வெற்றி பெற்ற மதிப்பிற்குரிய காயிதே மில்லத் அவர்கள் தென்னகத்தின் தலைநிமிர்ந்த வாழ்வுக்கும் பொதுவாக ஏழை—நடுத்தர மக்களின் வாழ்வு வளம்பெறவும் அரும்பணியாற்றுவார் என்ற உற்சாகத்துடன் அவருக்கு நமது வணக்கத்தையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

வெறுப்புக்கணக்கு

	60
கழித்தல்	0
மீதி	6

இந்த கணக்கைப் பார்த்தால், யாரோ முதலாவது, இரண்டாவது வகுப்பு மாணவன் போட்டது போல் தோன்றுகிறதல்லவா? ஆம். அப்படித்தான் தோன்றும், உண்மை தெரிகிறவரை.

ஆனால் பள்ளிச் சிறுவர்கள் யாரும் போடவில்லை இந்தக் கணக்கை! பாராளும் 'தகுதி' தங்களுக்கு மட்டுமே உண்டு என்று தம்பட்டம் அடித்துக் கொண்டவர்கள் தான் போட்டிருக்கிறார்கள்!

அதுமட்டுமா? இந்நாட்டின் பொக்கிஷத்தையே தன் தோளில் சுமந்துகொண்டிருந்தவராம், கனம் சி. சுப்பிரமணியம் அவர்தான் இந்தக் கணக்கைப் போட்டிருக்கிறார்!

இதைக் கேள்விப்படும்போது இன்னும் ஆச்சரியமாகத்தான் இருக்கும். ஏனென்றால் சட்டசபையிலே அவர் வெளியிடும் வரவு செலவுத் திட்டங்கள், புள்ளி விபரங்கள் ஆகியவற்றையெல்லாம் பார்த்தவர்களுக்கு, இதைப் பார்க்கும்போது வேடிக்கையாகவே தோன்றும். ஏதோ விளையாட்டுக்காகச் சொன்ன கணக்கோ என்கிற எண்ணம் எழக்கூடும்.

இப்போதுதான் தேர்தல் முடிந்திருக்கிறது. அவரோ பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். கணக்கைப் பார்த்தாலோ சிறுபிள்ளைத்தனமானதாக இருக்கிறது. எப்போது சொன்னதோ, 'எங்கே சொன்னாரோ; ஒன்றும் புரியவில்லையே' என்கிற குழப்பம்தான் ஏற்படும்.

அவர் எங்கோ சொன்னதல்ல; எப்போதோ சொன்னதும் அல்ல. அண்மையில்தான் இந்தக் கணக்கை சொல்லியிருக்கிறார்! அதுவும் ஒரு பொதுக்கூட்டத்தில் தான் சொல்லியிருக்கிறார்!

தமிழ் நாட்டில் முதல் கட்டத் தேர்தல் முடிந்தவுடன், அந்தத் தொகுதிகளில் போட்டியிட்டவர்கள் எல்லாம், மற்ற தொகுதிகளில் பணியாற்றச் சென்றது போலவே, தி.மு. கழகப் பொருளாளர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும், சென்னையிலும் காஞ்சியிலும் பணியாற்ற விரைந்துவந்தார். அந்த நேரத்தில் அவர் பேசிய ஒரு பொதுக்கூட்டத்தில், தி. மு. கழகத்திற்கு 60 இடங்கள் வரை கிடைக்கலாம் என்று குறிப்பிட்டார்.

இதைக் கேட்டதுதான் தாமதம். அடுத்தநாளே அலறி அடித்துக் கொண்டு மேடைக்கு வந்தார். சுப்ரமணியம்.

ஆஹா! அப்படியா? 60 இடமா? அதெல்லாம் கிடையாது. இது தப்புக்கணக்கு. சரியான கணக்கு என்னிடமல்லவா இருக்கிறது என்று கூறி, அதை மறுத்தார். அப்போது அவர் காட்டிய கணக்கைத்தான் மேலே குறிப்பிட்டிருக்கிறோம்.

60-ல் "0" போனால், 6! ஆகவே, 60 என்றால் "6" இடங்கள்தான் கிடைக்கும் என்று விளக்கம் தந்தார்.

ஏதோ, இவருடைய சொல்லுக்காக மக்கள் எதிர்பார்த்திருப்பது போல் எண்ணிக்கொண்டு, தமது சொல்வன்மையைக் காட்ட முன் வந்தார்.

அவர் மட்டுமா? அவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள்; ஆதரவாளர்கள்; ஆபத்பாந்தவர்களாக இருந்து கடைசி நேரத்திலே கைகொடுத்தவர்கள் ஆகிய அத்தனை பேரும இப்படித்தான் சொன்னார்கள். அவர்களுடைய வெற்றியைவிட, நமது தோல்வியைத் தான் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள்.

டி. ஆர். சந்தானம்

"ஒரு இடம் கூடக் கிடைக்காது!"

"பத்து இடம்......!"

"ஐந்து......!"

"இல்லை; நாலு......!"

"இல்லை; இல்லை. இரண்டு தான்!"

சந்தைக்கடையிலே, ஏலங்கூறுகிறவனைப்போல, தேர்தலைப்பற்றிய அறிவிப்பு வெளியானதிலிருந்து, ஒவ்வொருவரும் அவரவர் நிலைக்குத் தக்கபடி, முழுமூச்சுடன் ஆருடம் கணிக்க முன்வந்தார்கள்.

ஆனால், இந்த 'மதிப்பீடு' எவ்வளவு தவறானது என்பதை இப்போதுதான் அவர்கள் உணருகிறார்கள். தேர்தல் முடிவுகள் அனைவரையும் திகைக்கச் செய்கின்றன! எதிரியின் 'வலிமை'யை எவ்வளவு அற்பமாக மதித்துவிட்டோம்' என்று அலமறுகிறார்கள்!

ஆள் பலம், அதிகாரம், பத்திரிகை பிரச்சாரம், பணம். படை ஆகிய அத்தனை சக்திகளையும் கொண்டு எதிர்த்தும்கூட, வெள்ளம் போல் வெற்றி பெற்று வந்திருக்கிறார்களே என்று எண்ணிக் கலங்குகிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர்கள் அத்தனை பேரையும் தோற்கடித்துவிட்டோம்: ஆட்சிபீடத்தை அலங்கரிக்கப் போதுமான வலிவையும் பெற்றுவிட்டோம் என்கிற பெருமையும் பூரிப்பும் ஒரு புறமிருந்தாலும், அதைப் பூரணமாக அனுபவிக்க முடியாத அளவுக்கு, உள்ளத்திலே கவலையும் குடி கொண்டிருக்கிறது.

1957ல், 15 பேர்தான் வந்தார்கள்; அதிலும் 8 பேர் பிரிந்துவிட்டார்கள்; இதைச் சுட்டிக்காட்டி, எதற்கெடுத்தாலும் "தெற்கு தேயவில்லை; நீங்கள்தான் தேய்ந்துவிட்டீர்கள்" என்று கேலி பேசி வந்தோம். இவர்கள் எங்கே வெற்றி பெறப் போகிறார்கள் என்றல்லவா எண்ணிக்கொண்டிருந்தோம்.

ஆனால், நமது பலத்தையும் இழக்கும் நிலையிலல்லவா ஏற்பட்டிருக்கிறது! இப்போது உருவாகியிருக்கின்ற இந்தப் புதிய நிலைமையை எப்படிச் சமாளிப்பதுஎன்கிற நெஞ்சம்தான் அவர்களை ஆட்டிப் படைக்கிறது. ஆகவே, வெற்றி தோல்வியைப்பற்றி விமர்சனம் செய்யப் புறப்பட்டிருக்கிறார்கள்.

சுதந்திரா கட்சியும் முஸ்லீம் லீகும் சேர்ந்ததால்தான் தி. மு. கழகம் பெரும் அளவில் வெற்றி பெற்று விட்டதாம்!

இது கனம் காமராசரின் கண்டுபிடிப்பு.

இப்போது தி. மு க. இத்தனை இடங்களில் வெற்றி பெறுவதற்குக் காரணம் என்னவென்றால் இவர்கள் வெற்றி பெற்ற இடங்கள் எல்லாம் வறண்ட பகுதிகள் வறுமை இருந்து வரும் இடங்கள். அதனால் அந்தப் பகுதி மக்கள் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று தி. மு. கழகம் சொன்னதை நம்பி விட்டார்கள். அதனால் தி. மு. க. வெற்றி பெற்றுவிட்டது.

இது, சி. சுப்ரமண்யம் அவர்கள் கூறும் காரணம்.

கீழே விழுந்துவிட்ட மனிதனைத் தூக்கி நிறுத்தி, கல்லும் 'தட்டவில்லை; காலும் உருக்கவில்லையே; ஏனய்யா கீழே விழுந்துவிட்டாய்" என்று கேட்டால், கேட்டவனைப் பார்த்து, முகத்திலும் உடம்பிலும் படிந்திருக்கும் தூசியைத் துடைத்தவாறே; விழுந்துவிட்டேனா? பரவாயில்லை; மீசையில் ஒன்றும் மண் ஒட்டவில்லையே? என்று விழுந்தவன் திருப்பிக் கேட்டால், அவனைப்பற்றி நாம் என்ன நினைப்பது?

கீழேதான் விழுந்தோம் ஆனால் மீசையில் மண் ஒட்டவில்லை என்று சொல்லும் நிலையில்தான் இருக்கிறது, இவர்கள் சொல்லும் காரணம்.

அவர்களுடைய மூல பலத்திலே முறிவு ஏற்பட்டிருப்பதைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. ஆனால் தி.மு. கழகத்தின் வளர்ச்சிதான், அவர்களுடைய கண்ணையும் கருத்தையும் குடைகிறது. அதனால்தான் என்ன பேசுகிறோம் என்பதைக்கூட மறந்துவிட்டு, ஏதேதோ பேசுகிறார்கள்.

வறுமையில் வாடுகிறவனுக்கு, வீட்டிலேயிருக்கும் பெண் பருவமடைந்துவிட்டதைக் காணும் போது கவலைதான் ஏற்படும். அதைப்போலத்தான், ஜனநாயகத்திலே வறுமை நிலை எய்திவிட்ட காங்கிரசாருக்கு, இன்றைக்கு உருவாகி யிருக்கும் இந்தப் புதிய நிலை கவலையைத் தருவதாகவே உள்ளது. அவர்கள் எதிர்பார்த்தது நடந்துவிட்டது.

எனவேதான், எதிர்க்கட்சி தான் வேண்டும்; வேண்டும் என்று வாய் கிழியப் பேசியவர்கள் வியாக்கியானம் செய்ய முன் வந்திருக்கிறார்கள். 'பிரிவினைக்கொள்கையைக் கொண்ட எதிர்க்கட்சி நீண்ட நாள் நீடித்திருக்க முடியாது' என்று ஆருடம் கணிக்கிறார் காமராசர்.

நம்முடைய வளர்ச்சியைக் கண்டு வெறுப்புற்றதன் விளைவாகப் போடப்பட்ட கணக்குதான் இதுவும். இதன் முடிவு எப்படியிருக்கும் என்பதை நாம் விளக்கத் தேவையில்லை.

மறைவு

வண்ணை கே. எஸ். பாண்டியன் அவர்களின் துணைவியார் இந்திராணியம்மாள் அவர்கள் 24-2-62 சனி காலை இயற்கை எய்தினார்கள். என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அம்மையாரின் பிரிவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கு 10வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம் என 10வது வட்ட கழக சார்பில் துணை செயலாளர் இராசமன்னார் அறிவிக்கிறார்.

அதுபோன்றே நாமும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். [ஆர்]

1-ம் பக்கத் தொடர்ச்சி

இப்போது பட்டம்தானா இருக்கும் போது பொதுவுடமையினர் 'பிரசங்கம்' புரிகிறார்கள்!

தேர்தலுககு மட்டும்தான் இந்த திருவாசகம் என்றால் மக்களை அதிக நாள் ஏமாற்ற முடியாது என்பதை இவர்கள் நினைவில் வைத்துக்கொள்வது நல்லது.

தென்னகத்திற்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக தேசியத்தார் இன்று திருடனுக்கு தேள் கொட்டிய நிலையில் இருக்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் அது ஒரு அகில இந்திய இயக்கம் என்பதுதான்!

பெயரளவுக்குக்கூட அகில இந்திய என்ற தொடர்புள்ள எந்த கட்சியும் இதற்காக நியாய மனப்பான்மையோடு, லட்சியத் தெளிவோடு பணியாற்றிட முடியாது. காரணம் இயல்பாகவே இத்தகு கட்சிகளின் தலைமை வடக்கே போய்விடுகிறது.

டில்லி ஆதிக்கப் பிரச்னையை நெருங்கக்கூட அஞ்சுவதால்தான் பிற மாநிலங்கள் அளவுக்குக்கூட தமிழகத்தில் பொதுவுடமையினர் செல்வாக்குப் பெற முடியவில்லை. தெரிந்தோ, தெரியாமலோ 'டில்லியின் அநீதியைக் கண்டித்து விட்டால் அது எங்கே தி. மு. கழகத்திற்கு ஆதரவாகி விடுமோ என்ற அச்சம் வேறு இருக்கிறது.

எங்கோ அசையும் பிரமாண்டமான உருவங்களின் சாயலிலே அலையும் நிழலாயிருப்பதை விட சொந்த வடிவம் ஆயிரம் மடங்கு சிறப்பானது!

மக்களின் மன அசைவுகளை பிரதிபலிக்காத எந்த கட்சியின் வாழ்வும் நீண்டதாயிருக்காது! மக்களின் நினைப்பை எதிரொலிக்காததற்கு கேரள காங்கிரசும். மக்களின் மன விழைவை புறக்கணித்ததற்கு அங்குள்ள பி சோ.வும் நல்ல எடுத்துக்காட்டுகள்.

தென்னகத்தின் உரிமையைப் பெறவேண்டும் என்ற லட்சியத்தில் குறைந்தபட்ச அளவிலாவது பொதுவுடமையினர் ஒத்துழைத்தால் தென் மாநிலங்கள் நலம் பெற—ஏன் திராவிடம் விடுதலை பெற அது வழி வகுக்கும்.

குருசேவின் ராக்கெட்டும், மாசேதுங்கின் பிணக்கும், அமெரிக்க பிற்போக்கு நயவஞ்சக முதலாளித்துவமும், ஸ்டாலினின் பிணமும் நிறைந்திருக்கும் பொதுவுடமையினரின் சிந்தனைக்கு இந்த எடுத்துக்காட்டும் ஒரு சின்னஞ் சிறு சுமையாக இருக்கட்டும்!

ஆசிரியர், வெளியிடுபவர்: என். வி. நடராசன், அச்சிடுபவர், சோமு அச்சகம், 168, வால்டாக்ஸ் ரோடு, சென்னை-1